**கவனிக்க.-** 2007.09.14 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1516 - 2007 සැප්තැම්බර් 21 වැනි සිකුරාදා - 2007.09.21

1516 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 830 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 836 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, செத்தெம்பர் 28 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, செத்தெம்பர் 14 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1* விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

*1.2* சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

*1.3* சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1* நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

*2.2* அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

*2.3* அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1* நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

*3 : 1 : 1* சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

*3 : 1 : 2* சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

*3 : 1 : 3* சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

*3 : 1 : 4* அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

*3 : 1 : 5* அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

*3 : 1 : 6* இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

*3 : 1 : 7* அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

*3 : 1 : 8* தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1* நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

*4.2* நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

*4.3* அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

*4.4* ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1* ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1* எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

*6.2* விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

*6.3* விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

*6.4* விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

*6.5* விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1* தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும்.விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத்தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத்தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள்-வெற்றிடம்

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுனர் பதவிகள்

பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுனர் பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், "பணிப்பாளர்-ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப் பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுனர் பதவி" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2007.12.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் பொலிஸ் கொஸ்தாபல் பயிலுனர் சாரதி விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத் திட்டம்.**- *பொலிஸ் கொஸ்தாபல் சாரதி.*- ரூபா 1,66,560 - 7x1,440 - 27x1,800 - ரூபா 2,25,240.

(அ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்.

(ஆ) விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப் படும்.

(இ) கடமைக்கான பிரயாணச் செலவுகள், கஷ்டமான சேவை களுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள்.**- (அ) *வயதெல்லை :* பொலிஸ் கொஸ்தாபல் சாரதி வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 19-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) *கல்வித் தகைமைகள்.*- (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், ஆட்சேர்ப்பு மொழி அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியெய்திருத்தல் வேண்டும். இரு தடவைகளில் சித்தியெய்தியிருத்தல் முதல் தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப் படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையைக் கணக்கி லெடுக்கும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங் களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு.- 2.** க. பொ. த (சா. த.) பரீட்சையின் தொழிநுட்ப பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த (சா. த.) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமை யால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) *பௌதிக தகைமைகள்.- பொலிஸ் கொஸ்தாபல் பயிலுனர் சாரதி பதவி :*

(i) *உயரம் :* 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)

(ii) *மார்பு :* 30 அங்குலம் ஆகக்குறைந்தது (மூச்சுவிட்ட நிலையில்).

**குறிப்பு.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய, தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும் மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

(iii) *பார்வை தொடர்பான தேவை.*- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றக் கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமையற்றவராவர்.

(இ) *தொழில் தகைமைகள் :*

(i) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

(ii) மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்ற பின் ஆகக் குறைந்தது 1 வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- மோட்டார் வாகன தொழில்நுட்ப அறிவு, மோட்டார் வாகனங்களை திருத்தும் அறிவு, வாகனத்தை செலுத்துவதில் நீண்டகால அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

(ஈ) *பிற தகைமைகள் :*

(i) விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

(ii) வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்குத் தேவைப்படும் உடல் அவயங்களின் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீனம் அல்லது பிற உடல் குறைபாடு களுடைய வேட்பாளர் சேவைக்கு பொருத்தமானவர் என்றும்

வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் தகைமை நீக்கப்படுவார்.

(iii) அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது, பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப் படுவர். அது போலவே வீதி விதிகள், போக்குவரத்து சைகைகள் தொடர்பாக வேட்பாளர் பெற்றுள்ள அறிவு, ஒவ்வொரு வேட்பாளரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப் படும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தமது நியமனத்திற்கு முன் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். பொலிஸ் சேவைக்கு மருத்துவ ரீதியாக பொருத்தமற்றவராகக் காணப்படும் விண்ணப்பதாரர் நிராகரிக்கப்படுவர்.

(v) இறுதித் தெரிவுச் சபை முன் தோற்றுவதற்கு விண்ணப்ப தாரர் அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிக்கும் பரீட்சை, மனோவலிமைமைப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். எழுத்துப் பரீட்சை வினாப்பத்திரங்கள் இரண்டினைக் கொண்டிருக்கும்.

தொழிற் பரீட்சையின் போது கீழ்க்காணும் விடயங்கள் பரீட்சிக்கப்படும் :-

(அ) வாகனம் செலுத்தும் திறன்

(ஆ) பெருந்தெரு சட்டக் கோவை

(இ) வாகன பராமரிப்பு, சிறு பழுது பார்த்தல் வேலை தொடர்பான அறிவு

5. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துக்குட்பட்டது. விதவைகள்/விபுதாரர், அனாதைகள் ஓய்வுதிய திட்டத்துக்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்;

(ii) சேர்க்கப்பட்ட திகதி முதல் மாதாந்த உழைப்பில் 8% த்தை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டும்;

6. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் மூன்று ஆண்டு காலத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைவுறுத்துமுகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம் II ஆம் தொகுதி களின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக்கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

(உ) அடிப்படை பயிற்சிக்காலம் இலங்கை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் ஒரு வருடமும், பிரதேச பயிற்சிக் காலம் இரண்டு வருடங்களுமாக அமையும்.

(ஊ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பதவியில் உறுதிப் படுத்தப்படும் வரை பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதி இல்லாமல் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார். எவ்வாறா யினும் 1973, பெப்புருவரி 28 ஆந் திகதிய பொலிஸ் வர்த்தமானி பகுதி II இன் 41 ஆம் இலக்க அறிவித்தலின்படி தவிர்க்க முடியாத மிக முக்கிய காரணங்களின் கீழ் ஆகக் குறைந்தது 2 வருட திருப்திகரமான சேவையின் பின் பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதியுடன் திருமணம் செய்ய அனுமதிக்கப்படலாம்.

(எ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருடகால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும் சீருடைகள் முதலியவற்றுக்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத்தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத்தொகை இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாள ரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் முதலாம் தொகுதியில் ஐந்தாம் அத்தியாயத்தின் நாலாம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(ஏ) பொலிஸ் கொஸ்தாபல் சாரதி, பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவ தாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஓ)பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

7. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

8. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைகளை சான்றுப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத்துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாகப் பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

9. (அ) ஏலவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப் படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x 8" அளவு தாளில் விண்ணப்பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதியுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக் களத்தின் எந்த உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்த லாகாது.

10. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு** :- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்து செலவோ பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

விக்டர் பெரேரா,
பொலிஸ் மா அதிபர்.

தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
இணையத்தளம் : www.police.lk.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

*பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுனர் பதவி*

1. முழுப்பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண் ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

2. பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :-----.

4. தந்தையின் முழுப்பெயர் :-----.

5. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் :-----.

6. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும் தேர்தல் மாவட்டமும் :-----.

7. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா? பதிவு மூலம் எனில் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும் :-----.

(இ) வம்சாவழி மூலம் இலங்கை பிரசையானால் பின்வருப வர்கள் பிறந்த இடத்தை குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் :-----.

8. வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பக்காரரின் வயது (விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.) :-

வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

9. உயரம் :- அடி -----. அங்குலம் -----.

10. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :----.

11. திருமணம் ஆனவரா? /திருமணமாகாதவரா? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையில் அங்கத்த வரா? :-----.

13. வேறு ஏதேனும் விசேட தகுதிகள்/தகைமைகள் உண்டா ? :----.

14. உமது சாரதி சான்றிதழ் இலக்கம் வழங்கப்பட்ட திகதி :-----.

15. (அ) உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உற வினரல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரி களையும் தருக :-----.

(ஆ) பஸ் வண்டி, லொறி போன்ற பாரிய வாகனங்களை செலுத்துவதற்கு தகைமை விரிவுபடுத்தப்பட்டுள்ளதா ? அப்படியென்றால் அதன் திகதி :-----.

15. (அ) இலங்கை பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்தது உண்டா ? (அவ்வாறாயின்) அது தொடர்பான விபரங்களைத் தருக : -----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கை பொலிஸின் அல்லது இலங்கை உப சேவை பொலிஸில் சேவை செய்து உள்ளீரா ? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களை தருக :-----.

16. (அ) தற்போதைய படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதில் இருந்து விலகிய போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் : -----.

17. (அ) படைதாங்கு சேவையில் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது இருக்கின்றீரா? அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும் :-----.

18. நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின்கீழ் சேவை யாற்றியுள்ளீர்களா ? அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி, திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக :-----.

19. படைதாங்கு சேவையில் தொண்டர் அணியில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழ்களை இணைக்கவும் :-----.

20. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டீரா ? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

21. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறில் சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்திற்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக் கெட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

9-851/ 1

---

### இலங்கை பொலிஸ் திணைக்களம்

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், "பணிப்பாளர்-ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையில் இடப்பக்க மேல் மூலையில் "பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2007.12.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத் திட்டம்.**- பெண் பொலிஸ் கொஸ்தாபல்.- ரூபா1,66,560 - 7X1,440 - 27X1,800 - ரூபா 2,25,240.

(அ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்.

(ஆ) விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்.

(இ) கடமைக்கான பிரயாணச் செலவுகள், கஷ்டமான சேவைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) *வயதெல்லை.*- பெண் பொலிஸ் கொஸ்தாபல்- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) *கல்வித் தகைமைகள்.*- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், ஊடக மொழி அடங்கலாக ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையைக் கணக்கிலெடுக்கும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும் இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா./த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு**.- 2. க. பொ. த (சா./த.) பரீட்சையின் தொழிநுட்ப பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடையாமல், அதே பாடத்தின் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடை யாததாக கருதப்படும்.

**குறிப்பு** 3.- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த (சா./ த.) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க. பொ. த. (சா./த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) *பௌதிக தகைமைகள்*.- பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி-

(i) *உயரம் :* 5 அடி 2 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய, தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும் மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

(ii) *பார்வை தொடர்பான தேவை*.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றக் கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமையற்றவராவர்.

(இ) *பிற தகைமைகள் :*

(i) விண்ணப்பகாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் விவாகமான வர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணியாற்றும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

(ii) மேற்போன்ற அடிப்படைக் கல்வி, பௌதீக தகைமை களுடன் குறிப்பிட்ட வயதெல்லையை மீறாத வேறு ஏதாவது விளையாட்டுத் துறைகளில் விசேட ஆர்வம் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iii) இறுதித் தெரிவு சபைமுன் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர் அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிக்கும் பரீட்சை, மனோவலிமை பரீட்சை, எழுத்துப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். எழுத்துப் பரீட்சை விண்ணப்பப்பத்திரங்கள் இரண்டினைக் கொண்டிருக்கும்.-

(அ) வாக்கியங்கள் அமைத்தல் தொடர்பான பரீட்சை (*காலம் : 45 நிமிடம்*).

(அ) பொது அறிவு, விவேகம் தொடர்பான பரீட்சை (*காலம் : 1 மணித்தியாலம்*).

(iv) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நியமனம் பெறுவதற்கு முன் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். பொலிஸ் சேவைக்கு மருத்துவ ரீதியாக பொருத்தமற்றவராகக் காணப்படும் விண்ணப்பதாரர் நிராகரிக்கப்படுவர்

5. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துக்குட்பட்டது. விதவைகள்/ விபுதாரர், அனாதைகள் ஓய்வூதிய திட்டத்துக்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும் ;

6. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் மூன்று ஆண்டு காலத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைவுறுத்துமுகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம் II ஆம் தொகுதி களின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக்கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

(உ) அடிப்படை பயிற்சிக்காலம் இலங்கை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் ஒரு வருடமும், பிரதேச பயிற்சிக் காலம் இரண்டு வருடங்களுமாக அமையும்.

(ஊ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பதவியில் உறுதிப்படுத்தப்படும் வரை பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதி இல்லாமல் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார். எவ்வாறாயினும் 1973, பெப்புருவரி 24 ஆந் திகதிய பொலிஸ் வர்த்தமானி பகுதி II இன் 41 ஆம் இலக்க அறிவித்தலின்படி தவிர்க்க முடியாத மிக முக்கிய காரணங்களின் கீழ் ஆகக் குறைந்தது 2 வருட திருப்திகரமான சேவையின் பின் பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதியுடன் திருமணம் செய்ய அனுமதிக்கப்படலாம்.

(எ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருடகால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும் சீருடைகள் முதலியவற்றுக்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத்தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத்தொகை இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாள ரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை

அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் முதலாம் தொகுதியில் ஐந்தாம் அத்தியாயத்தின் நாலாம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(ஏ) பெண் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஓ) பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

7. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

8. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைகளை சான்றுபடுத்தும் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத்துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாகப் பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்) ;

(ஊ) தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி.

9. (அ) ஏலவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x 8" அளவு தாளில் விண்ணப்பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதியுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

10. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு :-** பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்து செலவோ பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

விக்டர் பெரேரா,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
*இணையத்தளம் :* www.police.lk.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

*பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி*

1. (அ) முழுப்பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.
2. பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.
3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :-----.

4. தந்தையின் முழுப்பெயர் :-----.

5. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் :-----.

6. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும் தேர்தல் மாவட்டமும் :-----.

7. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா? பதிவு மூலம் எனில் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும் :-----.

(இ) வம்சாவழி மூலம் இலங்கை பிரசையானால் பின்வருபவர்கள் பிறந்த இடத்தை குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரி :-----.

(2) விண்ணப்பதாரியின் தந்தை :-----.

(3) விண்ணப்பதாரியின் தந்தைவழிப் பாட்டன் :----.

(4) விண்ணப்பதாரியின் தந்தைவழி முப்பாட்டன் :-----.

8. வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரியின் வயது (விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.) :-

வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

9. உயரம் :- அடி -----. அங்குலம் -----.

10. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :----.

11. திருமணம் ஆனவரா? /திருமணமாகாதவரா? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையில் அங்கத்தவரா? :-----.

13. வேறு ஏதேனும் விசேட தகுதிகள்/தகைமைகள் உண்டா ? :----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினரல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :

(i) :----.

(ii) :----.

15. (அ) இலங்கை பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்தது உண்டா ? (அவ்வாறாயின்) அது தொடர்பான விபரங்களைத் தருக : -----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கை பொலிஸின் அல்லது இலங்கை உப சேவை பொலிஸில் சேவை செய்து உள்ளீரா ? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களை தருக :-----.

16. (அ) தற்போது படைதாங்கு சேவையில் சேவையாற்றுகின்றீரா ? (அவ்வாறாயின், அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்) :-----.

படைதாங்கு சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின், அதில் இருந்து விலகிய போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

17. படைதாங்கு சேவையில் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது இருக்கின்றீரா? அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையில் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும் :-----.

18. படைதாங்கு சேவையில் தொண்டர் அணியில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழ்களை இணைக்கவும்.

19. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டீரா ? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

20. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறில் சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்திற்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கெட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

9-851/2

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்களுக்கும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்குமான முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2007

திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களுக்கும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களுக்குமான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படுமெனவும், இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2007, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி எனவும், அவர்கள் மூன்றாவது வருடாந்த சம்பள அளவுத்திட்டத்தை அடைவதற்கு முன் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. **பரீட்சைத் திட்டம்.**- கீழே தரப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய விதத்தில் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை அமைந்திருக்கும் :-

(i) நிதிப் பிரமாணங்கள்/அலுவலக முறைமைகள் (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்
(ii) ஆங்கில மொழி (1 மணி 30 நிமிடங்கள்) - 100 புள்ளிகள்

**குறிப்பு.**- (அ) ஓர் உத்தியோகத்தர் தமது விருப்பப்படி ஒரே தடவையில் அல்லது பல தடவைகளில் சகல பாடங்களுக்கும் தோற்ற முடியும்.

(ஆ) ஒரு பரீட்சார்த்தி சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளையோ அல்லது அதற்குக் கூடுதலாகவோ பெற்றிருக்க வேண்டும்.

3. **பாடங்கள் :**

(அ) *நிதிப் பிரமாணங்கள்/ அலுவலக முறைமைகள்*

(2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(i) இலங்கையின் அரசாங்க முகாமைத்துவக் கட்டமைப்பு

(ii) நிதி கட்டுப்பாடும் வருடாந்த மதிப்பீடுகளும்

(iii) தாபனக்கோவையின் கட்டளைகளும் நிதிப் பிரமாணங்களும்

தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் உள்ளடக்கப்படும். I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII

அரசாங்க நிதிப் பிரமாணங்களின் I ஆவது பாகம் (X ஆவது அத்தியாயம் தவிர்ந்த)

(iv) அலுவலக முகாமைத்துவம்

(ஆ) *ஆங்கில மொழி* (1 மணி 30 நிமிடங்கள்) - 100 புள்ளிகள்

அபிவிருத்தி அலுவலர்கள் தங்களது கடமைகளைச் செய்வதற்குத் தேவையான ஆங்கில அறிவைப் பரிசோதிக்கும் விதத்தில் இந்த வினாத்தாள் வடிவமைக்கப்படும். க. பொ. த. சாதாரண தர வினாத்தாள்களுக்குச் சமமான விதத்திலும், மொழி, அறிவு, கட்டுரை எழுதுதல், சுருக்கி எழுதுதல், இலக்கணம், கிரகித்தல் என்பன உள்ளடக்கிய விதத்திலும் இந்த வினாத்தாள் அமைந்திருக்கும்.

4. **தகைமைகள்.**- இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட சகல அபிவிருத்தி அலுவலர்களும் மற்றும் கருத்திட்ட அலுவலர்களும் தகுதியுடையவராவார்கள்.

5. **விண்ணப்ப முறை.**- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம், ஒரு A4 அளவு தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இலக்கம் 1 இல் இருந்து 7 வரையிலான விபரங்கள் முதல் பக்கத்திலும், 8 இல் இருந்து மிகுதி விபரங்கள் இரண்டாவது பக்கத்திலும் வரும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால் நிரப்பப் படுதல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்களும் மற்றும் முறையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை தன்னுடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.) மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். அன்றேல் அவை நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்குமிடத்து விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவை சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பங்களில் ஆங்கிலத்திலேயே இடம்பெற வேண்டும்.

(ஆ) **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் பரீட்சைக் கட்டணங்கள் அறவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது :

| | *பரீட்சைக் கட்டணம்* | *ரூபா சதம்* |
|---|---|---|
| (அ) | முதற் தடவை தோற்றுவதற்கு | இலவசம் |
| (ஆ) | முதற் தடவையின் பின்னர் ஒவ்வோர் அமர்வுக்கும் முழுப் பரீட்சைக்கும் | 115.00 |
| (iii) | ஒரு பாடத்திற்கு | 75.00 |

பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 4000-20-03-20-13 வருமான தலைப்பிற்கு வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் நன்றாக ஒட்டி விடுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் போட்டோ கொப்பி பிரதி ஒன்றினை தம்முடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.)

(இ) விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடும் சேவையும், இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 07, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் 2007, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டு விண்ணப்பம் அனுப்பும் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஈ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழியிலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். அன்றேல் நிராகரிக்கப்படும்.

(உ) பொருத்தமான வடிவமைப்புக்கு அப்பாற்பட்டதும், எல்லா தகவல்களையும் கொண்டிராததும், பிந்தி வந்தடைகின்ற விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் அஞ்சலில் தொலைந்ததாகவோ, தாமதித்ததாகவோ செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

6. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசிகளுடன் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைத் திகதிக்குக் குறைந்தது 7 நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையைப் பெறாவிடின், அவர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை, (தந்தி : பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை)" என்ற முகவரிக்கு உடன் கால தாமதமின்றி தொடர்புகொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தொடர்புகொள்ளும்போது பின்வரும் தகவல்களையும் அறிவித்தல் வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;

(ii) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(iii) முழு அஞ்சல் முகவரி ;

(iv) விண்ணப்பத்தின் புகைப்படப் பிரதி ;

(v) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி.

7. **ஆளடையாள அட்டை.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் (ஒவ்வொரு பாடத்தின்போதும்) மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர்.

இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான ஒரு கடவுச்சீட்டு

மேற்கூறிய ஆவணங்களில் எதனையும் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியின் தகைமையை இரத்துச் செய்யும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பரீட்சை ஆணையாளருக்கு உண்டு. அத்துடன் பரீட்சை ஆரம்பமாகும் தினத்தன்று உறுதிப்படுத்தப்பட்ட கையொப்பத்துடன் கூடிய அனுமதி அட்டை மேற்பார்வையாளரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர்கள் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட திணைக்கள/ நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குக் கடமை விடுதலை வழங்குமாறு திணைக்கள/ நிறுவனத் தலைவர்கள் வேண்டப்படுகின்றார்கள். பரீட்சை ஆணையாளர் விதிக்கும் அனைத்து சட்டங்களுக்கும் விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். அவ்வாறான சட்டம் மற்றும் விதி மீறப்படுமாயின் பரீட்சை ஆணையாளர் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கு பரீட்சார்த்தி முகம்கொடுக்க வேண்டியிருக்கும்.

9. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயமும் இந்த அமைச்சின் தற்றுணிபின்படி முடிவு செய்யப்படும்.

தாரா விஜேதிலக,
செயலாளர்,
திட்ட அமுலாக்கல் அமைச்சு.

கோபுரம் 5, மட்டம் 12,
"மத்திய வங்கிக் கட்டிடம்",
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட கருத்திட்ட அலுவலர்களுக்கும் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்குமான முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2007**

First Efficiency Bar Examination for Development Officer & Project officers Recruite under the Ministry of plan implemation-2007

(**குறிப்பு**.- இப்படிவம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்படல் வேண்டும்.)

(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழிமூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தினை கூட்டில் இடுக.)

1. (i) சொந்தப் பெயர் முதலெழுத்துக்களுடன், முதலெழுத்துக்கள் கடைசியில் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
(உ-ம் :- MR. SILVA, A. B.)

(ii) சொந்தப் பெயர் முதலெழுத்துக்களுடன் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

(iii) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

(iv) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

2. (i) அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

(ii) அலுவலக முகவரி, அனுமதி அட்டை அனுப்பப்படும் விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

3. பிறந்த திகதி :-----.

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4. கருத்திட்ட/அபிவிருத்தி அலுவலர்களாகக் கடமையேற்ற திகதி : (கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட சரியான திகதியைக் குறிப்பிடுக)

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

5. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின்கீழ் விண்ணப்பிக்கும் பாடங்கள் :-----.

(i) பாடம் :-----. பாட இலக்கம் ☐

(ii) பாடம் :-----. பாட இலக்கம் ☐

6. நீங்கள் முதல் தடவையாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா ? :-----.

7. முதற் தடவையாக இல்லாவிட்டால், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :-----.

பரீட்சையின் முழுக் கட்டணம் ரூபா 115. ஒரு பாடத்திற்கு கட்டணம் ரூபா 75. பரீட்சை ஆணையாளருக்கு 4000-20-03-20-13 வருமான தலைப்பில் வைப்புச் செய்து இலங்கையிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை இங்கு நன்கு ஒட்டி விடுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை தன்னுடன் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்

8. நான் அளித்துள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேற் குறிப்பிட்ட 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையேன் என்றும் பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படுவேன் என்றும் யான் உறுதி செய்கின்றேன்.

....................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு.**- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்தகைய திணைக்களத் தலைவர் சார்பாகக் கையொப்பமிட அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் அல்லது தனது உள்ளூர் தலைவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

9. **கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ...................................................... எனது அலுவலகத்தில் ஓர் உத்தியோகத்தர் என்றும், அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர் 2007 ஆம் ஆண்டு .................... மாதம் .................. ஆந் திகதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

நான்-

(i) மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டுச் சரியாக இருக்கக் காணப்பட்டன என்றும்,

(ii) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமையுடையவர் என்றும்,

(iii) பரீட்சார்த்தி சரியான பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளார் என்றும்

சான்றுபடுத்துகிறேன்.

.............................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

9-828